(ஈ) மனுக்கள் குழு உறுப்பினர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 261(1)-வது விதியின்கீழ், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1989-90 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவிற்கு உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. திரு. இளம்வழுதி
2. திரு. எஸ். பி. கண்ணன்
3. திரு. அ. மலர்மன்னன்
4. திரு. ஆச்சியூர் எம். மணி
5. டாக்டர் கோ. நந்தகோபாலகிருட்டிணன்
6. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்
7. திருமதி பி. லட்சுமி
8. திரு. ஆ. பாலையா
9. திருமதி பாப்பா உமாநாத்
10. திரு. கோ. பூவராகன்
11. திரு. பி. என். வல்லரசு

பேரவையின் 261(2)-வது விதியின் கீழ், திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமிக்கின்றேன்.

6. கவன ஈர்ப்பு

(அ) கோவை மாவட்டம், பிள்ளையார்புரத்தில் வீடுகளும் கிருத்துவ ஆலயங்களும் இடிக்கப்பெற்றுள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத்தலைவர்அவர்களே, ''கோவை மாவட்டம் குறிச்சி அருகே பிள்ளையார்புரம் என்ற கிராமத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக குடியிருந்தவர்களின் வீடுகளையும் இரண்டு கிருத்துவ ஆலயங்களையும் 31-3-1989 ஆம் நாளன்று இடித்தது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

1989 ஏப்ரல் 24]

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களிடமிருந்து ஒன்றை பணிவன்புடன் தெரிந்துகொள்வதற்காக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இங்கே தரப்பட்டிருக்கின்ற நிகழ்ச்சி நிரலில் ஒத்திவைப்புத்தீர்மானம் என்று இல்லை. நீங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானம் இருப்பதுபோல அறிவித்து, ஏன் அவையை ஒத்தி வைக்கக்கூடாது என்று எல்லாம் சொல்லி, அதற்கு விளக்கம் எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். நான் எனது கவன ஈர்ப்புத் தீர்மானத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்தேன். நீங்கள் அதை எடுத்துப் பேச வாய்ப்புக்கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் நல்ல சப்ஜெக்டில் பேசியிருக்கிறார்கள் என்பது குறித்து எனக்கு மகிழ்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்பதா, இல்லையா என்று ஒரு முடிவுக்கு வந்த பிறகு உங்களுடைய கவனத்தை ஈர்க்கலாம் என்று கருதினேன். ஆனால் நீங்கள் அதிலேயே கவனமாக இருப்பது குறித்து இரட்டிப்பு மகிழ்ச்சி.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன். கேள்வி கேட்கிற உறுப்பினர் கேள்வி கேட்டதற்குப்பிறகு நான் பதில் அளிக்கிறேன்.

அறிக்கை.

கோவை மாவட்டம், குறிச்சி கிராமம், ச. எண். 4/1 இல் உள்ள 22.60 ஏக்கர் நிலத்தை, சுண்ணாம்புக்கல் வெட்டிஎடுப்ப தற்காக, ஏ.சி.சி. நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி நிலத்தில் 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் கிட்டத் தட்ட 700 குடிசைகளைப் போட்டு ராஜீவ் காந்தி நகர் என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த 700 குடிசைகளில், ஒரு சில வற்றில் மாத்திரம் மக்கள் குடியிருந்தனர். திரு. ஏ.சி.சி. நிறுவனம் மேற்படி ஆக்கிரமணதாரர்களை அகற்றிக் கொடுக்கு மாறு கோரி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். உயர்நீதிமன்றம், மேற்படி முறையீட்டில் வழங்கிய தீர்ப்பாணை யில் ஆக்கிரமிப்பாளர்களை 31—3—1989-க்குள் அகற்றக் கோரி கோவை மாவட்ட ஆட்சியர் மற்றும் கோவை மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு ஆணையிடப் பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணையின் அடிப்படையில்தான் 31—3—1989 அன்று ஆக்கிரமணதாரர்கள் காலிசெய்யப்பட்டனர். கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தனது அறிக்கையில், ஆக்கிரமணதாரர்கள் தெரிவித்துள்ளதுபோல் மேற்படி இடத்தில் சர்ச்சு மற்றும் எந்தவிதமான மதத்தை சேர்ந்த கட்டுமானங்களும் இல்லை என்றும், காலி செய்யும்

பொழுது ஆக்கிரமணதாரர்களின் உடமைகளுக்கும் மற்ற சொத்துகளுக்கும் எந்தவிதமான சேதமும் ஏர்படுத்தப்படவில்லை என்றும் காலிசெய்யப்பட்ட குடும்பத்தினருக்கு மேற்படி இடத்தின் அருகாமையில் உள்ள புறம்போக்கு நிலங்களில் மாற்று இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். தற்சமயம் எந்தவிதமான பதட்ட சூழ்நிலையும் அங்கு இல்லை.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில்தான் அங்கே ராஜீவ் காந்தி நகர் என்கிற பெயரில் நகர் அமைக்கப்பட்டது. அந்த நகரிலே வீடு கட்டுகிற ஒவ்வொருவரிடமிருந்தும் 500 ரூபாய் லஞ்சமாக பெற்று இருப்பதாக புகார் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் அது குறித்து இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் ஏதும் வரவில்லை.

(ஆ) குடவாசல் மருத்துவமனை பழுதுற்றதாலும் போதுமான மருத்துவர்கள் இன்மையாலும் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. இரா. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ''தஞ்சை மாவட்டம் குடவாசல் அரசு மருத்துவமனை பழுதடைந்தும், போதுமான மருத்துவர்கள் இல்லாமல் இருப்பதும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க் கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

தஞ்சை மாவட்டம், குடவாசல் அரசு மருத்துவமனையில் உள்ள புறநோயாளி பிரிவு தற்போது பொதுப்பணித் துறையினரால் சீரமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. பொது மக்கள் போக்குவரத்துக்கு அச்சமின்றி உள்ளது. கட்டிடத்தின் சில பகுதிகளில் ஓடு வேய்ந்த கூரைகளில், தண்ணீர், மழைக்காலத்தில் ஒழுகிக் கொண்டு வரும் நிலை உள்ளது எனத் தெரியவருகிறது. பொதுப்பணித்துறையின் மூலம் இப்பணியைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இங்கு அங்கீகரிக்கப்பட்ட உதவி அறுவை மருத்துவர்கள் இருவர் உள்ளனர். இவர்களில் ஆண் மருத்துவர் ஒருவரும், பெண் மருத்துவர் ஒருவரும் பணி புரிந்து வருகிறார்கள்.